# சீறத்துன்னபி ﷺ

## நாள் 25



# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: சொர்கத்தைப் பார்த்தது, நரகத்தின் தண்டனைகளைப் பார்த்தது
- பகுதி 2: அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜிலிருந்து மக்காவுக்கு பயணம் செய்து திரும்புதல்
- பகுதி 3: குரைஷிகளிடம் அல் இஸ்ரா பயணத்தை விளக்குதல்
- பகுதி 4: அபூபக்கர் (ரலி) அவர்கள் அல் சித்திக் பட்டத்தைப் பெறுவது

## பகுதி 1: சொர்கத்தைப் பார்த்தது, நரகத்தின் தண்டனைகளைப் பார்த்தது

- இஸ்ரா மற்றும் மிஃராஜ் பற்றிய ஹதீஸ்களின் இந்த இறுதிப் பகுதியில், நபி (ஸல்) அவர்கள் சொர்க்கம் மற்றும் நரக நெருப்பைக் கண்ட சில காட்சிகளைப் பற்றி காணலாம். இங்கு காணும் தகவல்கள் குறிப்பாக ஸஹீஹுல் புகாரீ மற்றும் முஸ்லிம் ஹதீஸ்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.



- நபி (ஸல்) அவர்கள் சொர்க்கத்தில் முத்துக்களால் ஆன கூடாரங்களைக் கண்டதாகக் கூறுகிறார்கள். சொர்க்கத்தின் மண் கஸ்தூரியால் (நறுமணம்) ஆனதாகவும் அவர்கள் கண்டார்கள்.

- நரகத்தின் பல தண்டனைகளைக் கண்டதாக நபி (ஸல்) அவர்கள் விவரித்தார்கள்.

- ஒரு ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''அனாதையின் பணத்தைத் திருடியவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதை நான் கண்டேன்..

- அவர்களுக்கு ஒட்டகங்களைப் போன்ற மூக்குகள் இருந்தன. மேலும் அவர்கள் நெருப்பால் செய்யப்பட்ட நிலக்கரியைச் சாப்பிடுவார்கள்.

- அவர்களின் வாய்கள் இந்த நிலக்கரியை விழுங்கும்; அவை அவர்களின் முதுகிலிருந்து வெளியே வரும்''.

- மற்றொரு ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''செம்பு நகங்களை

அணிந்திருந்த மக்கள் இருந்தனர், அவர்கள் அதைக் கொண்டு தங்கள் உடலையும், முகத்தையும் சொறிந்து கொண்டிருந்தார்கள்.

- இவர்கள் எப்போதும் புறம் பேசுபவர்கள்''.

- மற்றொரு ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''தங்கள் முன் தூய இறைச்சியை வைத்திருந்த மக்களை நான் கண்டேன், அதைத் தவிர அவர்கள் அழுகிய மற்றும் கெட்டுப்போன இறைச்சியையும் வைத்திருந்தார்கள்.





- அவர்கள் அழுகிய மற்றும் கெட்டுப்போன இறைச்சியை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

- இவர்கள் விபச்சாரம் செய்தவர்கள். அவர்கள் தங்கள் ஹலால் மனைவிகளை விட்டுவிட்டு, ஹராமுக்குச் சென்றவர்கள்.

- மற்றொரு ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் எழுந்து நிற்க முடியாத அளவுக்கு பெரிய வயிறுகளைக் கொண்ட மக்களைக் கண்டதாகக் கூறினார்கள். அவர்களை மிதிக்க விலங்குகள் கொண்டு வரப்பட்டன.

- அவர்கள் யார் என்று ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் நபி (ஸல்) கேட்டார்கள். வட்டியிலிருந்து பணம் பெற்றவர்கள் இவர்கள் என்று பதில் கிடைத்தது.

- மற்றொரு ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் செம்பு கத்தரிக்கோலால் மக்கள் தங்கள் உதடுகளையும், நாக்குகளையும் வெட்டுவதைக் கண்டதாகக் கூறினார்கள்.

- ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் அது பற்றிக் கேட்டபோது, ‘‘இவர்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்யச் சொல்லி, அதைத் தாங்களே செய்ய மறந்துவிட்டவர்கள்’’, என்று பதில் கிடைத்தது.

- அத்தகைய மக்களிடையே நாம் இல்லாமல் இருக்க அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். நரக நெருப்பை நெருங்குவதை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். ஆமீன்!

- நபி (ஸல்) அவர்கள் தஜ்ஜாலைக் கண்டதாகவும் கூறினார்கள். அவனது ஒரு கண் அழுகிய திராட்சை போல வீங்கியிருந்தது.

- இவை நபி (ஸல்) அவர்கள் சொர்க்கம் மற்றும் நரக நெருப்பின் காட்சிகளைக் கண்டது பற்றிய சில நிகழ்வுகள்.

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் பூமிக்கு இறங்கி, ஜெருசலேமுக்கு வந்தார்கள். அவர்கள் புராக்கை அவிழ்த்துவிட்டு அதன் மீது சவாரி செய்து மக்காவுக்குத் திரும்பினார்கள்.

## பகுதி 2: அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜிலிருந்து மக்காவுக்கு பயணம் செய்து திரும்புதல்

- மக்காவுக்குத் திரும்பும் வழியில், நபி (ஸல்) அவர்கள் குரைஷிகளுக்குச் சொந்தமான மூன்று வணிகக் குழுக்களைக் கடந்து சென்றதாகக் கூறப்படுகிறது.

- முதல் வணிகக் குழுவில் இருந்தவர்களை அவர்கள் அடையாளம் கண்டுகொண்டார்கள்.

- இரண்டாவது வணிகக் குழுவையும் அவர்கள் அடையாளம் கண்டுகொண்டார்கள். அவர்கள் ஒரு ஒட்டகத்தைக் காணாமல் அதைத் தேடிக்கொண்டிருந்ததையும் கண்டார்கள்.

- நபி (ஸல்) அவர்களுக்கு தாகம் ஏற்பட்டது. அவர்கள் மூன்றாவது வணிகக் குழுவை அணுகி, அதிலிருந்து தண்ணீர் குடித்துவிட்டு, பாத்திரத்தை மூடி வைத்துவிட்டு வந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் மக்காவுக்குத் திரும்பி வந்து தூங்கச் சென்று விட்டார்கள்.

- மக்காவுக்குத் திரும்பிய பிறகு நடந்த சம்பவத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

- அவர்கள் விழித்தெழுந்தபோது, தனக்கு முந்தய இரவில் என்ன நடந்தது என்பதை மக்களிடம் எப்படிச் சொல்வது என்றும், அதைக்கேட்டு அவர்கள் என்ன சொல்வார்கள் என்றும், அதை அவர்கள் எப்படி நம்புவார்கள் என்றும் நினைத்து மிகுந்த பதட்டம் அடைந்தார்கள்.

- அவர்கள் ஹராமில் பதட்டத்துடனும், கவலையுடனும் அமர்ந்திருந்தபோது, அல்லாஹ்வின் எதிரியான அபூஜஹ்ல் அவர்களைக் கடந்து செல்கையில், அவர்களை இந்த நிலையில் கண்டான்.

- அவன் நபி (ஸல்) அவர்களிடம், ‘‘உங்களுக்கு என்ன ஆச்சு. ஏதாவது நடந்ததா?’’ என்று கிண்டலாகக் கேட்டான்.

- நபி (ஸல்) அவர்கள், ‘‘ஆம், சில நிகழ்வுகள் நடந்தன’’ என்று கூறினார்கள். அபூஜஹ்ல் அருகில் வந்து, ‘‘என்ன நடந்தது?’’ என்று கேட்டான்.

- நபி (ஸல்) அவர்கள், ‘‘நேற்று இரவு, நான் இங்கிருந்து ஜெருசலேமுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்’’ என்று பதிலளித்தார்கள்.



- அபூஜஹ்ல் அதிர்ச்சியடைந்து, ‘‘அதற்குள் நம்மிடையே திரும்பி வந்து விட்டீர்களா?’’ என்று கேட்டான்.

- நபி (ஸல்) மேலும் கூறுகிறார்கள்: ‘‘அபூஜஹ்லுக்கு அப்போது என்னை கேலி செய்வதா அல்லது இன்னும் பல பேர் வருவதற்கு காத்திருந்து, அவர்களுடன் சேர்ந்து கேலி செய்வதா? என்று தெரியவில்லை’’.

- அபூஜஹ்ல், ‘‘நான் பிற மக்களை அழைத்தால், நீங்கள் இப்போது என்னிடம் சொன்னதை அவர்களிடமும் சொல்வீர்களா?’’ என்று கேட்டான். நபி (ஸல்) அவர்கள், ‘‘ஆம், நான் சொல்வேன்’’ என்று பதிலளித்தார்கள்.

## பகுதி 3: குரைஷிகளிடம் அல் இஸ்ரா பயணத்தை விளக்குதல்

- அபூஜஹ்ல் ஒரு அறிவிப்பு செய்யப்பட உள்ளது என்று கூறி மக்களை வெளியே வருமாறு அழைத்தான்.

- மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தனர். நபி (ஸல்) அவர்கள், முன்பு அவனிடம் கூறியதை மீண்டும் ஒரு முறை மக்கள் முன்னிலையில் கூறுமாறு அபூஜஹ்ல் கேட்டான்.

- நபி (ஸல்) அவர்கள், ‘‘நேற்று இரவு நான் ஜெருசலேம், பின்பு மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குச் சென்று திரும்பி வந்தேன்’’ என்று கூறினார்கள்.

- மக்கள் வெவ்வேறு வழிகளில் எதிர்வினையாற்றத் தொடங்கினர்.



- அவர்களில் சிலர் கைதட்டினார்கள், மற்றவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தலையில் கைகளை வைத்துக்கொண்டார்கள். மற்றும் சிலர்

சிரிக்கத் தொடங்கினர்.

- இந்த நிலை சிறிது நேரம் நீடித்தது; பின்பு கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவன், ''மஸ்ஜிதுல் அக்ஸாவை நீங்கள் விவரிக்க முடியுமா?'' என்று கேட்டான்.

- எனவே நபி (ஸல்) அவர்கள் விவரிக்கத் தொடங்கினார்கள். பின்னர் மக்கள் பள்ளிவாசலைப் பற்றிய நுணுக்கமான விவரங்களை அவர்களிடம் கேட்கத் தொடங்கினர்.

- நபி (ஸல்) அவர்கள் இரவில் பயணம் செய்திருந்தார்கள். அது ஒரு மாயக் கனவு போல் இருந்திருக்கும். அதனால் அவர்கள் தன்னைச் சுற்றியிருந்த ஒவ்வொரு நுணுக்கமான விவரங்களையும் கவனிக்கவில்லை.

- நபி (ஸல்) அவர்கள், ''நான் முன்பு எப்போதும் இல்லாததைப்போல் மிகவும் அதிமாக பயந்தேன்'' என்று ஒப்புக்கொண்டார்கள். ஏனென்றால் அவர்களால் மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியவில்லை.

- நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: ''நான் எப்படி பதிலளிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, எனது தூரத்தில் மஸ்ஜிதுல் அக்ஸா எனக்கு முன்னால் எழுவதைக் கண்டேன்; அது நான் அமர்ந்திருந்த இடத்திற்கு மிக அருகில் இறங்கியது.

- பின்னர் அவர்கள் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும், எனக்கு முன்னால் இருந்த மஸ்ஜிதுல் அக்ஸாவின் காட்சியைப் பார்த்து, அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தேன்''.

- இறுதியாக, மக்களில் ஒருவர், ''மஸ்ஜிதுல் அக்ஸாவின் விளக்கத்தைப் பொறுத்தவரை, அவர் துல்லியமாக கூறிவிட்டார்'' என்று கூறினார்.

- அந்த நேரத்தில், நபி (ஸல்) அவர்கள் பார்வையாளர்களிடம், ''நான் உங்களுக்கு இன்னும் சில அடையாளங்களையும் தருகிறேன்'' என்று கூறினார்கள்.

- அவர்கள் மூன்று வணிகக் குழுக்களைப் பார்த்ததாகக் குறிப்பிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் முதல் வணிகர் கூட்டத்தை விவரித்தார்கள்; அவர்கள் விரைவில் மக்காவை அடைவார்கள் என்றும் கூறினார்கள்.



- இரண்டாவது வணிகக் குழுவில் இருந்தவர்களைப் பற்றியும், அவர்கள் ஒரு ஒட்டகத்தை இழந்ததைப் பற்றியும் குறிப்பிட்டார்கள்.

- மூன்றாவது வணிகக் குழுவில் இருந்து, தான் தண்ணீர் குடித்ததையும், அதன் பாத்திரத்தை மூடி வைத்ததையும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, முதல் வணிகக் குழு அங்கு வந்தது, அது அவர்கள் சொன்னதற்குச் சரியாகப் பொருந்தியது.

- பின்னர் இரண்டாவது வணிகக் குழு வந்தது. அவர்கள் ஒரு ஒட்டகத்தை இழந்துவிட்டார்களா? என்று விசாரித்தனர்; வணிகக் குழு மக்களும் அதையே உறுதிப்படுத்தினர்.

- பின்னர் அவர்கள் தண்ணீருடன் வந்த மூன்றாவது வணிகக் குழுவை சோதனை செய்தனர்; அதில் தண்ணீர் பாத்திரம் மூடப்பட்டிருப்பதைக் கண்டார்கள்.

- அபூஜஹ்ல் இவற்றையெல்லாம் நேரில் சரிபார்த்தான். அவை உண்மை என்பதைக் கண்டறிந்தான். மக்களிடம், ‘‘இது அவரது மாயாஜாலங்களில் ஒன்று’’ என்று சொல்வதைத் தவிர வேறு எந்த சாக்குப்போக்கையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

## பகுதி 4: அபூபக்கர் (ரலி) அவர்கள் அல் சித்திக் பட்டத்தைப் பெறுவது

- மற்றொரு அறிவிப்பில், நபி (ஸல்) அவர்கள் தனது இரவுப் பயணம் குறித்து மக்களுக்குத் தெரிவித்தபோது, அதைக் கேட்ட மக்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்து, அவர்களை கேலி செய்தனர் என்று கூறப்படுகிறது.

- மக்களில் ஒருவர் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் ஓடி வந்து, ''உங்கள் தோழர் இப்போது என்ன சொன்னார் என்று உங்களுக்குத் தெரியுமா'' என்று கேட்டார். அதற்கு அபூபக்கர் (ரலி) அவர்கள், ''அவர்கள் என்ன சொன்னார்கள்?'' என திருப்பி வினவினார்கள்.

- அந்த நபர், ''உங்கள் தோழர் ஜெருசலேம் வரை சென்று, மக்காவுக்குத் திரும்பி வந்ததாக கூறுகிறார். இது ஒரு மாத கால பயணம். மேலும் அவர் இதையெல்லாம் ஒரே இரவில் செய்ததாகக் கூறுகிறார்'' என்று கூறினார்.

- உடனே அபூபக்கர் (ரலி), ''அவர்கள் (ஸல்) அப்படிச் சொல்லியிருந்தால், அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

- அந்த மனிதர், ''நீங்கள் உண்மையிலேயே அவரின் இந்தக் கூற்றை நம்புகிறீர்களா?'' என்று கேட்டார்.

- அதற்கு அபூபக்கர் (ரலி) அவர்கள், ''அவர்கள் கூறிய இதை விட அற்புதமான ஒன்றையும் நான் நம்புகிறேன். ஏழு வானங்களுக்கு மேலே இருந்து வஹீ வருவதாக அவர்கள் கூறுகிறார்கள். இரண்டில் எது மிகவும் அற்புதமானது, சொல்லுங்கள்''.

- இதன் காரணமாக, அன்றிலிருந்து அபூபக்கர் (ரலி) அவர்கள் 'அல் சித்திக்' அல்லது 'உண்மையாளர்' என்று அறியப்பட்டார்கள்.